## இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் - 2017

---

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் (“கூட்டுத்தாபனம்”) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டின் போதான கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

இந்நிதிக்கூற்றுக்களினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பு முகாமைத்துவத்திற்குக் காணப்படுகின்ற போதிலும், 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பான கருத்துரைகள்

### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய ரூபா 886,178,453 தொகையான வரிக்கான வயதுப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 2,839,674,961 தொகையான வியாபாரக் கடன்பட்டோர் மீதியில், கடன்பட்டோர் மீதிகளின் 95 சதவீதத்திற்கும் அதிகமானவை அரச நிறுவகங்களிடமிருந்து பெறவேண்டிய தொகைகளினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன் அவற்றில், ரூபா 1,228,553,068 தொகையொன்று அல்லது 43 சதவீதத்திற்குச் சமமான தொகை 03 வருடங்களுக்கும் மேலாக அறவிடப்படாது தொடர்ந்தும் காணப்படுகின்றது.

(ஆ) 05 வருடங்களுக்கும் மேலாக நானாவித கடன்பட்டோராக கணக்குகளுக்கு ரூபா 7,450,055 தொகையொன்று தொடர்ச்சியாகக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அதனை அறவிடுவதற்கோ அல்லது தொடர்புடைய தரப்பினர்களினை இனங்காண்பதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்வேறு நோக்கங்களிற்காக பல்வேறுபட்ட தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 410,933,309 முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 144,944,204 தொகை 5 வருடங்களிற்கு மேலாக அறவிடாமலிருந்தது.

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட கடன் பகுப்பாய்வின் பிரகாரம், ரூபா 226,121,330 மற்றும் ரூபா 116,549,944 கடன்பட்டோர்கள் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு முறையே 3 தொடக்கம் 5 வருடங்கள் மற்றும் 5 வருடங்களிற்கு மேலாக தீர்க்கப்படாமலிருந்தது.

(உ) கடன்கொடுத்தோர்களில் கீழ் காட்டப்பட்ட ரூபா 1,807,107 தொகையான கடன் மீதிகள் மற்றும் ரூபா 491,749 தொகையான வரவு மீதிகள் தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான பட்டியலில் காட்டப்பட்ட 05 கடன்பட்டோர் மீதிகள் மற்றும் உரிய கடன்பட்டோர்களிடமிருந்து பெறப்பட்ட கடன்பட்டோர் உறுதிப்படுத்தல்களுக்கிடையே ரூபா 296,807,702 கூட்டுத்தொகையான வித்தியாசங்கள் காணப்பட்டது. இந்த வித்தியாசங்களுக்கான காரணங்கள் கணக்காய்விற்கு விபரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 06 மாதங்கள் காலப்பகுதியொன்றுக்கு மேலாக கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்ககப்பட்டிராத ரூபா 380,936 பெறுமதியுடைய 13 காலங்கடந்த காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 233(1) | உப ஒப்பந்தகாரர்களிடமிருந்து ரூபா 169,539,789 தொகையான ஊழியர் உப ஒப்பந்த முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் | மீளாய்வாண்டிற்காக பௌதீக சரிபார்த்தலின் பிரகாரம், ரூபா 5,632,278 கூட்டுத்தொகையான 6,130 விடயங்களின் இருப்புப் பற்றாக்குறை எக்கல களத்தில் அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 2,886,019 பெறுமதியான 2957 மிகையான இருப்பு விடயங்கள் அத்தகைய களத்தில் அவதானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிச் சட்டம் | 2006 சனவரியிலிருந்து 2015 யூலை வரை ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவு படிகள் மீது தொடர்புடைய நிதிகளுக்கு முறையே ரூபா 307.82 மில்லியன் மற்றும் ரூபா 41.97 மில்லியன் பங்களிப்புக்கள் அனுப்பப்படாமை காரணமாக, கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு முறையே ரூபா 153.91 மில்லியன் மற்றும் ரூபா 20.98 மில்லியன் மிகைக்கட்டணங்கள் செலுத்தப்படவேண்டியுள்ளது. |
| (இ) | கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் விநியோகிக்கப்பட்ட 1979 திசெம்பர் 20 இன் 121/1979 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2(இ) பிரிவு | கட்டளைகளுடன் காசோலைகளில் முற்பணங்கள் வழங்கப்படுகையில், 30 நாட்கள் காலப்பகுதியினுள் அவ்வாறான முற்பணங்கள் தீர்ப்பனவுசெய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், வழங்கப்பட்ட ரூபா 89,503,424 கூட்டுத்தொகையான அவ்வாறான முற்பணங்கள் 03 வருடங்களுக்கும் மேலாக தீர்ப்பனவு செய்யப்படாது தொடர்ந்தும் காணப்படுகின்றது. |
| (ஈ) | 2006 பெறுகை வழிகாட்டிகளின் 8.9.1(அ) ஆம் வழிகாட்டி | ரூபா 500,000 மிஞ்சுகின்ற பொருட்கள் சேவைகளின் வழங்கல்களிற்காக எழுத்துமூல உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். எனினும் ஒரு மில்லியனிற்கு மேலதிகமாக அத்தகைய முற்பணங்கள் 13 சந்தர்ப்பங்களில் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடாமல் வழங்கப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கங்களாவன: (i) கட்டிடங்கள், சிவில் பொறியியல் மற்றும் ஏனைய பொறியியல் செயற்திட்டங்களின் புலனாய்வு, திட்டமிடல், வடிவமைப்பு மற்றும் நிர்மாணம். (ii) ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளின் ஏற்பாடு. (iii) ஆதன அபிவிருத்தி வேலைகளினை மேற்கொள்ளல். (iv) தயாராகவுள்ள கான்கீரீட் கலவை, வலுப்படுத்தப்பட்ட கான்கீரீட் மற்றும் முற்-அழுத்த கான்கிரீட் உற்பத்திகளின் தயாரிப்பு மற்றும் விற்பனை. (v) பொறியியல் செயற்திட்டங்கள்/ பொறுப்பேற்கப்பட்டவற்றிக்குத் தேவையான நிர்மாண மூலப்பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி, விற்பனை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி. (vi) பொறியில் மற்றும் தொழில்நுட்ப நபர்களுக்கான பயிற்சியளித்தல். (vii) மேற்குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்ட நிர்மாண மூலப்பொருட்கள், முறைமைகள் மற்றும் நுட்பங்களுக்குள் ஆய்வுகளினை மேற்கொள்ளுதல்.

மேற்குறித்த நோக்கங்களினை அடைந்து கொள்ளும் பொருட்டு 2017 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்ட பிரதான செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 198,661,125 கூட்டுத்தொகையான ஆரம்ப பண முற்பணங்கள் பெறப்பட்டிருந்த போது எந்தவொரு வேலைகளும் அத்தகைய ஆரம்ப முற்பணங்கள் தொடர்பில் இதுவரை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 2,945,423,776 கூட்டுத்தொகையான பல்வேறு நிர்மாண வேலைகளிற்காக உப ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்ட ஆரம்ப முற்பணங்கள் 5 வருடங்களிற்கு மேலாக அறவிடப்படாமலிருந்ததுடன் அத்தகைய செயற்திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்ட வேலைகள் நிறைவேற்றுவதிலுள்ள செயற்திறனின்மையால் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் ரூபா 308,255,164 மொத்த நட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 1,376,888,537 திரட்டப்பட்ட தேறிய நட்டம் 2017 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு அத்தகைய செயற்திட்டங்களிடமிருந்து ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பின்வரும் தந்திரோபாயங்கள் மற்றும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

தந்திரோபாயங்கள் :

(i) அனைத்து கட்டிட வடிவமைப்பிலும் 20% சக்தி சேமிப்பை மேற்கொள்ளல்.

(ii) நீர்ப்பாசனம், நீர்வழங்கல் மற்றும் ஏனைய நிர்மாண உற்பத்திகள் தொடர்பான ஏனைய பொருட்களின் உற்பத்தியினை வருடாந்தம் 5% சதவீத தற்போதைய மட்டத்தில் அதிகரித்தல்

நடவடிக்கைகள் :

(i) கிடைக்கக்கூடிய கூட்டுமுயற்சிகளின் தொடர்ச்சியான செவ்வை

(ii) தொழில்நுட்ப கணக்காய்வு

### 3.1.1 கூட்டுத்தாபனத்தின் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகள்

நிர்மாணப் பிரிவு, நிர்மாண மூலக்கூறுப் பிரிவு, இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவு, விசேட செயற்பாடுகள் பிரிவு மற்றும் ஆலோசனைப் பிரிவு போன்ற ஐந்து பிரிவுகளுடன் கூட்டுத்தாபனம் செயற்படுத்துகின்றதுடன் ஒவ்வொரு பிரிவினதும் செயலாற்றல் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டது.

#### (அ) நிர்மாண பிரிவு

(i) மீளாய்வாண்டின் போது இந்தப்பிரிவின் கீழ் செயற்படுகின்ற மாலிஹாவத்தவிலுள்ள இயந்திரவியல் வாடகை தளத்தால் எந்தவொரு வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது இந்தப் பிரிவில் செயற்படுத்தப்பட்ட 23 செயற்படுகின்ற செயற்திட்டங்களில் 20 செயற்திட்டங்கள் ரூபா 44,310,106 கூட்டுத்தொகையான இலாபமொன்றை பதிவுசெய்திருந்த அதேநேரம், 3 செயற்திட்டங்கள் ரூபா 319,716,399 நட்டமொன்றை பதிவுசெய்திருந்தது. ஆகையால், தற்போதுள்ள செயற்திட்டங்களில் ரூபா 275,406,293 மொத்த தேறிய நட்டம் ஏற்பட்டது.

**(ஆ) நிர்மாண மூலக்கூறு பிரிவு**

------------------------------------------------------

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இரத்மலானயிலுள்ள பிரிகாஸ்ட் (precast) முற்றம் தொடர்பில் செயற்பாட்டு இலாபத்தில் 41 சதவீதத்தினால் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. மேலும், மீளர்யவாண்டின் போது 22 சதவீதத்தினால் தேறிய நட்டம் அதிகரிப்பொன்று அறிக்கையிடப்பட்ட போதிலும் தன்கொடுவயிலுள்ள தச்சுப்பொருட்கள் முற்றம் விற்பனை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 26 சதவீதத்தால் குறைவடைந்ததுடன் தெமட்டஹொட கொங்கறீட் ஸ்லிப்பேர்ஸ் முற்றம் மற்றும் வெலிஹன்ட் பிறிகாஸ்ட் முற்றத்தின் தேறிய இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 32 சதவீதம் மற்றும் 90 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**(இ) இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவு**

-----------------------------------------------------------------------------

(i) பேலிமகொடவிலுள்ள செயற்பாடு முற்றம் (104 ஆம் இலக்க தளம்) 2013 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நட்டத்தை ஏற்படுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 23 மில்லியன் தேறிய நட்டத்தை அறிக்கையிட்டிருந்தது.

(ii) மாத்தளையிலுள்ள பொலோமைட் செயற்படுத்தல் திட்டம் (1100 ஆம் இலக்க தளம்) 2006 ஆம் ஆண்டைத் தவிர கடந்த 18 ஆண்டுகளாக நட்டத்தில் தொடர்ச்சியாக ஓடுகின்றதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறிய நட்டம் 76 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**(ஈ) விசேட செயற்பாடுகள் பிரிவு**

---------------------------------------------------------

கலபதவிலுள்ள நிலக்கீல் பொறி (Asphalt Plant) இற்கு மூலப்பொருட்களின் விநியோகத்திற்கு மீளாய்வாண்டில் விநியோகஸ்தர்களுக்கு ரூபா 29,642,269 தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்ட போதிலும், ரூபா 13,016,723 பெறுமதியுடைய மூலப்பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் இந்த பொறியியல் ஆண்டின் போது எந்தவொரு வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

**3.1.2 தேசிய உபகரணங்கள் மற்றும் இயந்திரவியல் நிறுவகத்தின் செயற்பாடு (என்ஈஎம்ஓ)**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வில் வேண்டப்பட்ட பெறுமதி சேர் வரி (வற்) தேசத்தை கட்டியெழுப்பு வரி (என்பீரி), பொருளாதார சேவை கட்டங்கள் (ஈஎஸ்பீ) தொடர்பிலான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால் அத்தகைய வரிகளின் உண்மையான செலுத்த வேண்டிய மீதிகளை கணக்காய்வில் திருப்திகரமாக தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு தீர்ப்பனவு செய்யப்படவேண்டிய பெறுமதி சேர் வரி (வற்) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) முறையே ரூபா 123.84 மில்லியன் மற்றும் ரூபா 7.8 மில்லியன் தொகை தீர்ப்பனவுசெய்யப்படாது தொடர்ந்தும் காணப்படுகின்றது.

(இ) தேசிய வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டிய ரூபா 235.8 மில்லியன் தொகையொன்று 2002 இலிருந்து 2011 வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தென்மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட தேசிய இளைஞர் நிர்வாக குழுவின் நிர்மாண வேலைகள் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கணக்காய்வு தெரிவு செவ்வையின் பிரகாரம், 05 நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பிலான செயன்முன்னேற்ற விபரங்கள் நிர்மாணங்கள் உபநிர்மாணக் கோவையில் இல்லாதிருந்ததுடன் நிர்மாண வேலைகள் நிர்மாண காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும், தாமதக் கட்டணங்களை உபஒப்பந்தகாரர்களிடமிருந்து அறவிடமுடிந்திருக்கவில்லையென வெளிப்பட்டிருந்தது. மேலும், உபஒப்பந்தகாரர்களின் தெரிவு சென்முறைகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ii) 2008 பெப்ரவரி 06 இன் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் செயற்படுத்தப்பட்ட சமரச ஒப்பந்தங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனமானது முற்பண முறிகள் மற்றும் செயலாற்றல் / பாதுகாப்பு முறிகளை வழங்குவதிலிருந்து விடுபட்டிருந்தது. எனினும், இந்த விடுதலையானது கூட்டுத்தாபனத்தினால் எடுக்கப்பட்ட வேலைகளை உப ஒப்பந்தமிடுகையில் பிரயோகிக்க முடியாது. இருந்த போதிலும், இளைஞர் கூடாரத்தை நிர்மாணித்தலானது உபஒப்பந்தகாரர்களிடமிருந்து அத்தகைய முறிகளை பெற்றுக்கொள்ளாமல் வழங்கப்பட்டது.

(iii) 21 நிர்மாண வேலைகளில், 8 நிர்மாண வேலைகள் ஒவ்வொன்றும் ரூபா 3,121,253 இல் வழங்கப்பட்ட அதேநேரம் 13 பல்வேறு வகையான நிர்மாண வேலைகள் ரூபா 12,222,509 விகிதத்தில் உபஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டது. அதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தேசிய இளைஞர் கூடாரத்திலிருந்து பெறப்பட்ட 3 நிர்மாண வேலைகளானது 28 சதவீதத்திலிருந்து 34 சதவீதத்திலான அசாதாரண இலாப எல்லையுடன் ஒபஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டது என கணக்காய்வு தெரிவு செவ்வையில் வெளிப்பட்டிருந்தது.

(உ) என்ஈஎம்ஓ இற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 344 ஆகக் காணப்பட்ட போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான பதவியணியினர் 785 என குறிப்பிடப்பட்டது. இருப்பினும், 441 மிகை ஊழியர்களுக்களுக்கான அங்கீகாரம் நிறுவகத்தினால் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், என்ஈஎம்ஓ ஆனது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியில்லாமல் 33 புதிய பதவிகளை உருவாக்கியிருந்ததுடன் 62 உத்தியோகத்தர்கள் 33 அங்கீகரிக்கப்படாத பதவிகளிற்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் இயந்திரவியல் மற்றும் மின்னியல், நிர்மாணக்கூறு மற்றும் நிர்மாணப் பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,570.74 மில்லியன் மொத்தப் பெறுமதியான எண்பத்தெட்டு (88) செயற்திட்டங்களானவை 2015 இற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், அத்தகைய செயற்திட்டங்களானது மீளாய்வாண்டின் இலாப கணிப்பீட்டு அறிக்கையில் பூர்த்தியாக்கல் கட்டத்தில் 20 சதவீதத்தை விட குறைவாக மற்றும் 20 - 90 சதவீதத்தை காட்டியிருந்தது. அதேநேரம், ரூபா 149.17 மில்லியன் பெறுமதியான 02 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டிற்கான இலாபத்தை கணிப்பீடு செய்கையில் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் 03 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்த போதும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இயந்திரவியல் மற்றும் மின்சாரவியல் பிரிவின் கீழ் செயற்படுகின்ற முறையே வீதி மற்றும் பாலப் பொறிக்காக ரூபா 12,651,414 மற்றும் ரூபா 20,903,794 செலவினம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(இ) பொறியியல் மற்றும் இயந்திரவியல் பிரிவு, நிர்மாணக்கூறு பிரிவு மற்றும் நிர்மாணப் பிரிவில் 2015 இற்கு முன்னர் 34 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டில் ரூபா 11,479,060, ரூபா 1,480,131 மற்றும் ரூபா 25,411,302 செலவினமொன்று ஏற்பட்டிருந்தது. அத்தகைய செயற்திட்டங்களில், ரூபா 1,545,626 இலாபத்தை 22 செயற்திட்டங்களும் மற்றும் ரூபா 35,959,748 நட்டமொன்றை 2 செயற்திட்டங்களும் காட்டியது.

(ஈ) 2015 இல் அல்லது 2015 இற்கு முன்னர் தொடங்கப்பட வேண்டிய ரூபா 232,766,966 மொத்தப் பெறுமதியான எட்டு செயற்திட்டங்கள் நிர்மாணப் பிரிவால் 2018 ஒக்தோபர் 11 இலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அத்தகைய சில செயற்திட்டங்கள் இலாபக் கணிப்பீடு அறிக்கையில் 20 சதவீத பூர்த்தியாக்கல் கட்டத்தை விட குறைவாகக் காட்டியது.

### 3.3 ஏனைய அரச நிறுவகங்களுக்கு விடுவிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சிற்கும் நகர மீள்குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபைக்கும் கூட்டுத்தாபனத்தின் இருபது (20) உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். மேலும், மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், இத்தகைய உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் உரிய நிறுவகங்களுக்கு மீளளிக்கப்பட வேண்டும். எனினும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்காக கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்ட ரூபா 7,271,960 மற்றும் ரூபா 3,380,420 சம்பளங்கள் 11 உத்தியோகத்தர்கள் தொடர்பில் 2018 செப்தெம்பர் 30 வரையிலும் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 விளைவற்ற சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த செயற்திட்டத்தின் இடைநிறுத்தத்தால் சீ-நகர செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட காணியானது விளைவற்றிருந்தது.

(ஆ) என்ஈஎம்ஓ இன் பிரதான களஞ்சியங்களிலுள்ள கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அலுமினியம் வார் மற்றும் செய்லிங் சீற் இருப்புக்கள் பயன்படுத்தப்படாமல் இறுதி இருப்பிற்காக எடுக்கப்பட்டிருந்தது.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பெறுமதி சேர் வரி, பொருளாதார சேவைக் கட்டணம் மற்றும் தேசத்தைக் கட்டியொழுப்பும் வரி என்பவற்றை உரிய நேரத்தில் செலுத்தாமை காரணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் ரூபா 114,399,641 மிகைக்கட்டணமொன்று விதிக்கப்பட்டிருந்தது. மேலும், பெறுமதி சேர் வரி, பொருளாதார சேவைக்கட்டணம் மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி போன்றன முறையே ரூபா 628,504,287 மற்றும் ரூபா 67,996,943 மற்றும் ரூபா 15,130,647 தொகைகளானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 3.6 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ப்படுகின்றன.

(அ) நிரந்தர அடிப்படையில் சிரேஸ்ட முகாமைத்துவ மட்டத்திலுள்ள அதிகமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்களினை மேற்கொள்ளும் பொருட்டு, 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்தினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை, எனினும், உயர் சம்பள அளவிடைகளின் கீழுள்ள சிரேஸ்ட முகாமைத்துவ மட்டத்திலுள்ள 06 பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 29 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும், 49 அத்தியட்சகர்களும் (சிவில்) ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

(ஆ) தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினிலுள்ள பதவியொன்றிற்கு மாத்திரம் நியமனமொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். இருப்பினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 39 பதவிகளுக்கு 850 மிகை ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) 2006 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய, 28(ii) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2009 நவம்பர் 25 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் டீஎம்எஸ்/ஈ3/43/4/265/1 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி வெற்றிடங்கள் நிரப்பப்படக்கூடாது அல்லது புதிய பதவிகள் உருவாக்கப்படக்கூடாதென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், 10 அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்கு 13 ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதி பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 - 2021 ஆம் காலப்பகுதிக்கு கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் திட்டம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிட்டப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதிலுள்ள தவறுகளின் சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டது. கூட்டிணைந்த திட்டத்தில் உருவாக்கப்பட்ட பின்வரும் இலக்குகள் எதிர்பார்க்கப்பட்டவாறு அடையப்பட்டிருக்கவில்லை.

(அ) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவினதும் சராசரி அதிகுறைந்த வருடாந்த வருமானத்தை 5 சதவீதத்தினால் முன்னேற்றுவதற்கும் மற்றும் செயற்திட்டங்களிலிருந்து 5 சதவீத வருடாந்த மேலதிக வருமானத்தினை உழைப்பதற்கும்.

(ஆ) கடன்களின் அறவிடுகைக்கான முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு மற்றும் 20 சதவீதத்தினால் தற்போதைய கடன் மட்டத்தினைக் குறைப்பதற்கும்.

(இ) வியாபார செயற்பாடுகளின் பல்வகைப்படுத்தல்களின் கீழ், புதிய வருமானம் உழைக்கும் துறைகளினை இனங்காணல் மற்றும் வியாபார செயற்பாடுகளின் விரிவாக்கல்.

## 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டமொன்றினை கூட்டுத்தாபனம் தயாரித்திருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சில நோக்கங்கள் தந்திரோபாயங்கள் மற்றும் நடவடிக்கைகளை அடைதலிற்கான நேரகாலம் தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் அதனுள் பின்வரும் முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(i) வருமானம், செயற்பாட்டுச் செலவினங்கள், அபிவிருத்தி செலவினங்கள், நிதிநிலமைக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று போன்றவற்றை உள்ளடக்கிய வருடாந்த பாதீடு

(ii) முன்மொழியப்பட்டுள்ள பாரிய முதலீடுகள், இயளளவினை கட்டியெழுப்பல் மற்றும் பாரிய பெறுகைகளை உள்ளடக்கிய வருடாந்த பெறுகைத்திட்டம்

(iii) மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டம்

(iv) கடன் மீள்செலுத்துகைத் திட்டம்

(v) உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 46 சதவீதம் தொடக்கம் 70 சதவீதம் வரையான வீச்சில் முக்கியமான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையினால், பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டில் வினைத்திறனான கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என சுட்டிக்காட்டுகின்றது.

## 4.4 வருடாந்த அறிக்கைகளினை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 யூலை 20 வரையிலும் பாராளுமன்றத்தில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் காலத்திற்கு காலம் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதிக்கட்டுப்பாடு | (i) கட்டளைகளுடன் காசோலைகளினூடாக முற்பணங்களினை வழங்கல். |
| | (ii) பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்ட கடன்பட்டோர்களிடமிருந்து நிதியங்கள் அறவிடப்படாமை. |
| | (iii) வாடிக்கையாளர்களுக்கு பற்றுச்சீட்டுக்களினை சமர்ப்பிப்பதில் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள். |

<table>
<tr><td></td><td></td><td>(iv)</td><td>தீர்ப்பனவு செய்யப்பட்டிராது நீண்டகாலப்பகுதியொன்றுக்கு மேலாக கொள்வனவு முற்பணங்கள் காணப்படுகின்றமை.</td></tr>
<tr><td></td><td></td><td>(v)</td><td>நிர்மாணங்களுடன் தொடர்புடைய நீண்டகால பிடிகாசினை தீர்ப்பனவு செய்யத்தவறியமை.</td></tr>
<tr><td>(ஆ)</td><td>வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்</td><td>(i)</td><td>தீர்க்கப்படாமல் நீண்டகாலமாக ஆரம்ப முற்பணங்கள் உள்ளமை.</td></tr>
<tr><td></td><td></td><td>(ii)</td><td>குறித்த நேரத்தில் வரிகளை செலுத்தாமையால் தவறால் மிகையறவீடுகள் கொடுப்பனவு</td></tr>
<tr><td>(இ)</td><td>ஆளணி நிர்வாகம்</td><td>(i)</td><td>ஏனைய நிறுவகங்களுக்கு மனித வளங்களினை விடுவித்தல்</td></tr>
<tr><td></td><td></td><td>(ii)</td><td>அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து ஊழியர்களினை ஆட்சேர்ப்புச் செய்கின்றமை.</td></tr>
<tr><td></td><td></td><td>(iii)</td><td>ஒப்பந்த அடிப்படையில் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளுக்கு உத்தியோத்தர்களினை ஆட்சேர்ப்புச் செய்கின்றமை.</td></tr>
<tr><td>(ஈ)</td><td>சொத்துக்கள் முகாமைத்துவம்</td><td colspan="2">விளைவற்ற சொத்துக்களினை முறையாகப் பயன்படுத்துவதற்கு மற்றும் காணிகளின் உரிமையினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கத்தவறியமை.</td></tr>
<tr><td>(உ)</td><td>இருப்புக் கட்டுப்பாடு</td><td colspan="2">அனைத்து தளங்களிலும் வருடாந்த மெய்மையாய்வை நடாத்துவதற்கு தவறியமை.</td></tr>
</table>